‘டெல்டா’ மாவட்டங்களை வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டும்

உதயநிதி ஸ்டாலின்

தஞ்சாவூர், ஆ.க. 3: ‘டெல்டா’ மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவித்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 25,000 நிவாரணம் வழங்க வேண்டும் என்று திமுக இளைஞரணிச் செயலரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

காவிரி உரிமையை நிலைநாட்டுவதில் தவெக அரசின் மெத்தனப் போக்கை கண்டிப்பதாகக் கூறி, தஞ்சாவூரில் திமுக சார்பில் பனகல் கட்டடம் அருகே திங்கள்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை வகித்து உதயநிதி ஸ்டாலின் மேலும் பேசியதாவது:

ஆடிப்பெருக்கு காலத்தில், தண்ணீரின்றி காவிரி வறண்டு பாலைவனம் போல காட்சி அளிக்கிறது.

குறுவை சாகுபடியைக் காப்பாற்ற முடியாமல், சம்பா சாகுபடியின் நிலை என்னவாகுமோ என்று விவசாயிகள் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

முதல்வர் விஜய் ஆய்வு என்ற பெயரில் ரீல்ஸ் எடுத்துக் கொண்டிருக்கிறார்.

தஞ்சாவூரில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற திமுகவினர், கூட்டணிக் கட்சியினர் மற்றும் விவசாயிகள் உள்ளிட்டோர்.

திமுக மீது மட்டுமே முதல்வருக்கு கவனம்: காவிரி பிரச்னைக்கு உரிய முக்கியத்துவம் அளிக்காமல், முதல்வர் விஜய் தொடர்ந்து மௌனம்காத்துவருகிறார். அவருக்குதிமுகவினர் மீது என்ன பொய் வழக்கு போடலாம் என்பதில் மட்டுமே கவனம் இருக்கிறது. கர்நாடக அரசைக் கண்டித்தும், தமிழக விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும், தமிழக அரசு உரிய சட்டப் போராட்டத்தை விரைவுபடுத்த வேண்டும்.

குறுவை சாகுபடி பொய்த்ததால் சுமார் 14 லட்சம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவித்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25,000 நிவாரணம் வழங்க வேண்டும்.

மேலும், பயிர்க் காப்பீட்டுத் தொகையை அரசே ஏற்பதுடன், சம்பா சாகுபடிக்குத் தேவையான விதை, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை மானிய விலையில் வழங்க வேண்டும். தவெக தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியின்படி விவசாயக் கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆகஸ்ட் 5-ஆம் தேதி தொடங்கும் சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் விவசாயிகளின் கோரிக்கைகளையும், காவிரி நீர் தொடர்பான உரிமைகளையும் வலியுறுத்தி, திமுக சார்பில் உறுதியாகக் குரல் எழுப்பப்படும். மக்கள் மன்றம், நீதிமன்றம், சட்டப்பேரவை என அனைத்து இடங்களிலும் விவசாயிகளின் உரிமைகளுக்காக திமுக தொடர்ந்து துணைநிற்கும் என்றார் உதயநிதி ஸ்டாலின்.

கர்நாடக அரசை முதல்வர் கண்டிக்காதது ஏன்?

சென்னை, ஆ.க. 3: காவிரியில் தண்ணீர் திறந்துவிட மறுக்கும் கர்நாடக அரசை முதல்வர் விஜய் கண்டிக்காதது ஏன் என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கை: மேக்கேதாட்டு அணையைக் கட்டியே தீருவோம் என அடம்பிடிக்கும் கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லத் துடிக்கும் தமிழக முதல்வர், கர்நாடகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டம் குறித்த செய்திகளைப் பார்த்தாரா? தமிழகத்தில் அதேபோல் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்ட முதல்வருக்கு நேரமில்லையா?

விவசாயிகளைச் சந்திக்காமல் புறக்கணித்துவிட்டு, வேளாண் பட்ஜெட்டை திருப்பதிக்கு கொண்டு சென்றால் போதுமா? நாகபுரியில் தமிழக விவசாயிகள் கைது செய்யப்பட்டதற்குக்கூட கண்டனம் தெரிவிக்காமல் மௌனம் காக்கிறார் முதல்வர்.

விவசாயிகளை இனியும் வஞ்சிக்காமல் தவெக அரசு வாக்குறுதியளித்தபடி முழுக் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும். குறுவை சிறப்பு நிவாரணத் தொகுப்பு வழங்கி, டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும். காவிரியில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட தீவிரமாகச் செயல்பட வேண்டும். அதுவரை திமுகவின் போராட்டம் தொடரும் என்று தெரிவித்துள்ளார்.

காவிரி பிரச்னையில் தவெக அரசு கவனத்துடன் செயல்பட வேண்டும்

சென்னை, ஆ.க.3: காவிரி பிரச்னையில் தவெக அரசு போதிய கவனத்துடன் செயல்பட வேண்டும் என்று அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவு தினத்தையொட்டி, சென்னை கிண்டியில் உள்ள அவரது உருவச் சிலைக்கு திங்கள்கிழமை மலர் தூவி அஞ்சலி செலுத்திய பின்னர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது: காவிரி பிரச்னையில் தமிழக அரசு செயல்படுகிறதா என்ற கேள்வியை விவசாயிகள் எழுப்பிவருகின்றனர். தவெக ஆரம்பித்து 2 ஆண்டுகளில் ஆட்சிக்கு வந்துள்ளதால் காவிரி பிரச்னையில் போதிய அனுபவமில்லாமல் உள்ளனர். காவிரி பிரச்னையில் போதிய கவனத்துடன் தவெக அரசு செயல்படவேண்டும்.

அதிமுக, திமுக ஆட்சிக்காலங்களில் காவிரி பிரச்னை குறித்து அனைத்துக்கட்சிக் கூட்டங்கள் கூட்டி முடிவெடுக்கப்பட்டுள்ளன. தற்போது அனைத்துக் கட்சி கூட்டமும் கூட்டப்படவில்லை. காவிரி பிரச்னையில் உச்சநீதிமன்றத்தில் கிடைத்த தீர்ப்பை காப்பாற்ற முடியாத அரசாக தவெக அரசு உள்ளது. ஆகவே, காவிரிப் பிரச்னையில் மூத்த சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து அரசு செயல்பட வேண்டியது அவசியம். அதிமுக பொதுக்குழுவை விரைவில் கூட்டுவோம் என்றார்.

‘ஏக்கருக்கு ரூ.25ஆயிரம் வழங்குக’: எடப்பாடி கே.பழனிசாமி திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கையில், தண்ணீரின்றி பாதிக்கப்பட்டுள்ள டெல்டா விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணத்தை தமிழக அரசு வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஐ.எஸ்.இன்பதுரையின் ‘2016’ தேர்தல் வழக்கு: உயர்நீதிமன்ற உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் தடை

நமது நிருபர்

புது தில்லி, ஆ.க. 3: தமிழக சட்டப்பேரவைக்கு 2016-ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் ராதாபுரம் தொகுதியில் அதிமுகவின் ஐ.எஸ். இன்பதுரை வெற்றி பெற்றது செல்லாது என்றும், அத்தொகுதியின் 2016 முதல் 2021 வரையிலான காலகட்டத்தில் எம்எல்ஏ ஆக அப்பாவுவை அதிகாரபூர்வமாகப் பதிவு செய்ய வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் திங்கள்கிழமை இடைக்காலத் தடை விதித்தது.

இது தொடர்பாக தற்போது மாநிலங்களவை அதிமுக எம்.பி.யாக உள்ள ஐ.எஸ். இன்பதுரை தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை நீதிபதிகள் பி.வி. நாகரத்னா, ஆர். மகாதேவன் அடங்கிய அமர்வு திங்கள்கிழமை விசாரித்தது.

அப்போது இன்பதுரை சார்பில் மூத்த வழக்குரைஞர் முகுல் ரோத்தகி ஆஜராகி, ‘உயர்நீதிமன்ற உத்தரவு மனுதாரரின் அரசியல் வாழ்க்கையைப் பாதிக்கும்’ என வாதிட்டார். இதையடுத்து, அப்பாவு உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட நீதிபதிகள், மறுஉத்தரவு வரும்வரை உயர்நீதிமன்ற உத்தரவுக்குத் தடை விதித்து விசாரணையை ஒத்திவைத்தனர்.

வழக்கின் பின்னணி: ‘2016’ சட்டப்பேரவை தேர்தலில் ராதாபுரம் தொகுதியில் இன்பதுரை 49 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றதாக அறிவிக்கப்பட்டது. இதை எதிர்த்து திமுக வின் அப்பாவு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். நிராகரிக்கப்பட்ட 203 தபால் வாக்குகள் தொடர்பாக எழுந்த சர்ச்சையை அடுத்து, அக்டோபர் 2019-இல் வாக்குகளை மீண்டும் எண்ண உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இதை எதிர்த்து இன்பதுரை உச்சநீதிமன்றம் சென்ற நிலையில், 2026, மே 21-இல் அந்த மனுவைத் தள்ளுபடி செய்த உச்சநீதிமன்றம், பதவிக் காலம் முடிந்துவிட்டதால் மேற்கொண்டு உத்தரவிட உயர்நீதிமன்றத்துக்கு அனுமதி அளித்தது. இதையடுத்து, இன்பதுரையின் வெற்றியை செல்லாது என கடந்த ஜூன் 8-இல் சென்னை உயர்நீதிமன்றம் அறிவித்து, 2016 முதல் 2021 வரையிலான காலகட்டத்தில் ராதாபுரம் சட்டப்பேரவைத் தேர்தலில் வென்ற பேரவை உறுப்பினராக அப்பாவுவின் பெயரைப் பதிவு செய்ய உத்தரவிட்டது. இந்த வழக்கு ஏற்கெனவே முடித்துவைக்கப்பட்ட நிலையில் அது தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து இன்பதுரை உச்சநீதிமன்றத்தை நாடியுள்ளார்.

மதுரை அருகே இரு கார்கள் மோதல்: 5 பேர் உயிரிழப்பு

மதுரை, ஆ.க. 3: மதுரை மாவட்டம், மேலூர் அருகே திங்கள்கிழமை இரு கார்கள் மோதிக்கொண்டதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்தனர்.

சென்னை மடிப்பாக்கத்தைச் சேர்ந்தவர் கனகராஜ் (55). இவரது இளைய மகன் பாலாஜியின் மனைவிக்கு தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் குழந்தை பிறந்தது. குழந்தையைப் பார்ப்பதற்காக கனகராஜ், அவரது மனைவி ராஜகுமாரி (50), மகன்கள் பாலாஜி (28), ஸ்ரீராம் (32), மூத்த மருமகள் ரஞ்சனா (27), இரண்டு வயது குழந்தை கிருத்திகா ஆகிய 6 பேரும் காரில் கோவில்பட்டி நோக்கிச் சென்றனர். காரை ஸ்ரீராம் ஓட்டினார்.

திருச்சி-மதுரை நான்கு வழிச் சாலையில் தும்பைபட்டி அருகே வந்த போது, அதே சாலையில் சென்ற இரு சக்கர வாகனம் மீது கார் மோதியது.

இதனால், கட்டுப்பாட்டை இழந்த கார், சாலையின் நடுவே இருந்த தடுப்பைத் தாண்டி, சாலையின் எதிர்புறம் சென்ற கார் மீதும் மோதியது.

இதில் பலத்த காயமடைந்த ராஜகுமாரி, இவரது மகன்கள் பாலாஜி, ஸ்ரீராம், அவரது மனைவி ரஞ்சனா, இவர்களின் 2 வயது குழந்தை கிருத்திகா ஆகிய 5 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். கனகராஜ் பலத்த காயமடைந்தார். இதேபோல, இரு சக்கர வாகனத்தில் சென்ற தும்பைபட்டியைச் சேர்ந்த முருகன் (55), மற்றொரு முருகன் (40), சாலையின் எதிர்புறம் காரில் சென்ற திருச்சியைச் சேர்ந்த பிரகாஷ் (40) ஆகியோரும் பலத்த காயமடைந்தனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

உயிரிழந்த (இடமிருந்து) ரஞ்சனா, குழந்தை கிருத்திகா, ஸ்ரீராம், அவரது சகோதரர் பாலாஜி, தாய் ராஜகுமாரி.

உயிரிழந்தவர்களின் உடல்களை மேலூர் போலீஸார் கூறாய்வுக்காக மேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். காயமடைந்தவர்களை மீட்டு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

விபத்து குறித்து மேலூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மதுரை மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா விபத்து நிகழ்ந்த இடத்துக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்தார். விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

அதிகாரப்பூர்வ கலைப்பு அலுவலர் அலுவலகம்
1வது தளம், “கார்ப்பரேட் பவன்”, பண்ட்லகுடா, நாகோல், ஹைதராபாத் - 500 068.
தொலைப்பேசி எண்கள்: 040-29803086/3186, மின்னஞ்சல்: ol.hyderabad@mca.gov.in

தெலங்கானா மாநில உயர் நீதிமன்றம், ஹைதராபாத்
(அசல் அதிகார வரம்பு)
நிறுவன விண்ணப்ப எண் 577/2003 இல் I.A.எண். 1/2026
இதில்
நிறுவன மனு எண். 131/1999
நிறுவனங்கள் சட்டம் 1956 தொடர்பான வழக்கு
மற்றும்
M/s பென்னார் பேட்டர்சன் லிமிடெட் (கலைப்பு நிலையில்) தொடர்பான வழக்கு

இவர்களுக்கு இடையில்: M/s. பென்னார் பேட்டர்சன் லிமிடெட் (கலைப்பு நிலையில்)
பிரதிநிதியாக அதிகாரப்பூர்வ கலைப்பு அலுவலர்
தெலங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம், ஹைதராபாத். ....மனுதாரர்
-எதிர்-
1). M/s. ஸ்ரீவத்ஸா அட்வைசரி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்
(முன்னர் M/s மார்த்தி கன்சல்டன்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என அறியப்பட்டது)
20 (11), லட்சுமணன் தெரு, தி.நகர், சென்னை-600017.
மற்றும் 3 பிற எதிர்மனுதாரர்கள்
பெறுநர்,
திருமதி. கீதா டெண்டுகுரி, இயக்குநர்,
M/s. ஸ்ரீவத்ஸா அட்வைசரி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்,
20 (11), லட்சுமணன் தெரு, தி.நகர், சென்னை-600017.
C.A.எண். 577/2003-இல் எதிர்மனுதாரர் எண் 3.

அறிவிப்பு

தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.அதிகாரப்பூர்வ கலைப்பு அலுவலர், ரூ.68,55,131.49 பைசா தொகையை, 24-11-1999 முதல் தொகை முழுதும் வசூலாகும் தேதி வரை ஆண்டுக்கு 18% வட்டியுடன் சேர்த்து வசூலிப்பதற்காக, மாண்பமை தெலங்கானா உயர் நீதிமன்றம், ஹைதராபாத் முன்னிலையில் நிறுவனங்கள் சட்டம், 1956-இன் பிரிவு 446(2)(b)-இன் கீழும் அதன் தொடர்புள்ள நிறுவனங்கள் (நீதிமன்ற) விதிகள், 1959-இன் விதி 9 மற்றும் 11(b)-இன் கீழும், C.P எண் 131/1999-இல் நிறுவன விண்ணப்ப எண் 577/2003-ஐ I.A எண் 1/2026 உடன் சேர்த்து தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு, மாண்பமை தெலங்கானா உயர் நீதிமன்றம், ஹைதராபாத்தில், நிறுவன வழக்குகளை விசாரிக்கும் மாண்புமிகு நீதிபதி முன்னிலையில் விசாரணைக்காக **24-08-2026 அன்று காலை 10.30 மணிக்கு** பட்டியலிடப்பட்டுள்ளது. மாண்பமை தெலங்கானா உயர் நீதிமன்றம், ஹைதராபாத் முன்னிலையில் மேற்கூறிய எதிர்மனுதாரர் எண் 3, நேரில் அல்லது தனது வழக்கறிஞர் மூலமாக ஆஜராகுமாறு இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், நீங்கள் மேற்கூறிய தேதியில் ஆஜராகத் தவறினால், இந்த வழக்கு ஒருதலைப்பட்சமாக விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படும்.

(மாண்பமை உயர் நீதிமன்றத்தின் உத்தரவின்படி)
நாளது 2026 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 31 தேதியிட்டது
ஒப்பம்/- (A.K.சஹூ, ICLS)
தேதி:- 31-07-2026 அதிகாரப்பூர்வ கலைப்பு அலுவலர்,
இடம்:- ஹைதராபாத் தெலங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம், ஹைதராபாத்

இ.வே.ஆ.த.-மத்திய வேளாண் பொறியியல் நிறுவனம்
மண்டல நிலையம், கோயம்புத்தூர் - 641 007 (தமிழ்நாடு)
भा कृ अ प - केन्द्रीय कृषि अभियांत्रिकी संस्थान
प्रादेशिक केंद्र कोयम्बतूर 641007 (तमिलनाडु)
ICAR - CENTRAL INSTITUTE OF AGRICULTURAL ENGINEERING
REGIONAL STATION, COIMBATORE - 641007 (TAMILNADU)
Telephone Nos. 0422-2472623/24 E-mail: rsciaecbe@gmail.com

WALK-IN-INTERVIEW FOR YOUNG PROFESSIONAL II ON 14th AUGUST 2026

RECRUITMENT OF YOUNG PROFESSIONAL II (01 no.) - “NASF project on “Development and evaluation of robotic harvester for grape bunches” at ICAR-CIAE RS COIMBATORE, TAMIL NADU

For detailed notification, please visit Institute website https://ciae.res.in and click on “ANNOUNCEMENT” from the Home page.

HEAD, ICAR-CIAE-Regional Station

தி கேசிபி லிமிடெட்
CIN : L65991TN1941PLC001128
பதிவு அலுவலகம்: ‘ராமகிருஷ்ணா பில்டிங்’
2, டாக்டர் பி.வி. செரியன் க்ரசண்ட், எழும்பூர், சென்னை–600 008. இந்தியா
தொலைபேசி: +91 44 66772600, ஈ–மெயில்: corporate@kcp.co.in, www.kcp.co.in

ஜூன் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் அறிக்கை

(₹ கோடியில்)

எண்.	விபரங்கள்	தனித்தன்மையானது				ஒட்டுமொத்தமானது			
		முடிவடைந்த 3 மாதங்கள்			முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த 3 மாதங்கள்			முடிவடைந்த ஆண்டு
		30.06.2026	31.03.2026	30.06.2025	31.03.2026	30.06.2026	31.03.2026	30.06.2025	31.03.2026
		தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது
1	மொத்த வருமானம்	394.91	485.21	391.81	1,660.58	806.16	703.85	693.01	2,648.92
2	இந்தக் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி மற்றும் தனிச்சிறப்புள்ள இனங்களுக்கு முன்)	0.64	58.63	21.10	142.34	55.91	110.14	96.57	296.89
3	இந்தக் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) வரிக்கு முன் (தனிச்சிறப்புள்ள இனங்களுக்கு பின்)	0.64	58.63	21.10	144.21	55.91	109.88	96.57	288.26
4	இந்தக் காலத்திற்கான நிகர லாபம் வரிக்கு பின் (தனிச்சிறப்புள்ள இனங்களுக்கு பின்)	0.48	69.82	14.28	131.80	55.75	121.07	89.76	275.85
5	இந்தக் காலத்திற்கான முழுமையான வருமானம் (இந்தக் காலத்திற்கான வரிக்குப் பிந்தைய லாபம் மற்றும் வரிக்குப் பிந்தைய இதர முழுமையான வருமானங்களை உள்ளடக்கியது)	0.06	69.66	15.32	131.93	50.42	170.88	82.22	362.80
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (பங்கு ஒன்றுக்கு ஆவண மதிப்பு ரூ.1/–)	12.89	12.89	12.89	12.89	12.89	12.89	12.89	12.89
7	இதர சமபங்கு (2025–26ஆம் ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலையில் உள்ளபடி)				828.04				1,768.99
8	ஒரு பங்கு ஈட்டிய வருவாய் (ஆவண மதிப்பு ரூ.1/– ஒவ்வொன்றும்) (வருடாந்திரமல்ல) அடிப்படை மற்றும் மாற்றியமைக்கப்பட்ட நிலையில்	0.04	5.42	1.11	10.22	2.86	6.60	4.92	15.29

பட்டியல் மற்றும் வெளியீடு குறித்தத் தேவைகள் தொடர்பாக, செபி (SEBI) அமைப்பு 2015ம் ஆண்டு வழங்கியுள்ள வழிகாட்டுதலில் உள்ள விதிமுறை எண்.33ன் படி, பங்குச் சந்தையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, ஜூன் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் மேலே தரப்பட்டுள்ளது. முழுவடிவிலான நிதிநிலை முடிவுகளை (www.nseindia.com மற்றும் www.bseindia.com) என்ற பங்கு வர்த்தக இணையதளங்களிலும் மற்றும் www.kcp.co.in என்ற கம்பெனியின் இணையதளத்திலும் காணலாம்..

இடம் : சென்னை
தேதி : 3 ஆகஸ்ட், 2026

• Cement • Heavy Engineering • Sugar • Power • Hospitality

இயக்குநர்கள் குழு சார்பாக
Dr. V.L. இந்திரா தத்
தலைவர் & நிர்வாக இயக்குநர்

சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் பைனான்ஸ் குரூப் —
சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் (ஃபண்ட்) திட்டங்கள் தொடர்பான திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கியத் தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவல் அறிக்கை (SAI) ஆகியவற்றிற்கான அறிவிப்பு மற்றும் இணைப்பு

சுந்தரம் AMC-யின் முக்கியப் பணியாளரை நியமித்தல்

திரு. ரோனக் ஷா அவர்கள், 2026 ஆகஸ்ட் 03 முதல் அமலுக்கு வரும் வகையில் ‘பிக்சட் இன்கம் பிரிவுக்கான அசோசியேட் ஃபண்ட் மேனேஜர்’ (Associate Fund Manager – Fixed Income) ஆக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம். அதற்கேற்ப, சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் ‘கூடுதல் தகவல் அறிக்கை’யில் (SAI) உள்ள ‘முக்கியப் பணியாளர்கள் குறித்த தகவல்கள்’ என்ற பிரிவில் அவரது விவரங்கள் சேர்க்கப்படும்.

பெயர் & பதவி	வயது/கல்வித் தகுதிகள்	சுருக்கமான அனுபவம்
திரு. ரோனக் ஷா , அசோசியேட் ஃபண்ட் மேனேஜர் - பிக்சட் இன்கம்	வயது: - 37 ஆண்டுகள் கல்வித் தகுதி: - MBA, B.Com.	13+ வருட அனுபவம் - பிக்சட் இன்கம் முதலீடுகள் மற்றும் ஃபண்ட் மேனேஜ்மெண்ட் • மே 2017 – ஜூலை 2026 – டாடா ஏஐஜி லைஃப் இன்சூரன்ஸ் கோ. லிமிடெட் – முதலீடுகள் (பிக்சட் இன்கம் செக்யூரிட்டீஸ் மற்றும் ஃபண்ட் மேனேஜ்மெண்ட் தொடர்பான செயல்பாடுகள்) • டிசம்பர் 2012 – ஏப்ரல் 2017 – திரவியம் டிரெடிஷன் அண்ட் செக்யூரிட்டீஸ் (பி) லிமிடெட் - ப்ரோக்கிங் (பிக்சட் இன்கம் செக்யூரிட்டீஸ் தொடர்பான செயல்பாடுகள்)

திட்டத் தகவல் ஆவணம்(கள்) / முக்கிய தகவல் குறிப்பாணை(கள்) / கூடுதல் தகவல் அறிக்கையின் மற்ற அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும்.

இந்த இணைப்பு அவ்வப்போது திருத்தப்படும் சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவல் அறிக்கை (SAI) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆஃபீசர்

இடம்: சென்னை
தேதி: ஆகஸ்டு 04, 2026

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615
கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஓல்ட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை. திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

HINDUJA HOUSING FINANCE
இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
தலைமை அலுவலகம்: 167/170, மௌண்ட் பூனமாலை சாலை, சிங்காரவேலு, வளசரவாக்கம், சென்னை - 600 116
கிளை அலுவலகம்: எண் 101, முதல் தளம், திருவள்ளுவர் சாலை, சென்னைஇராயபுரம், சென்னை - 600 013.

01.08.2026 அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமணி, விழுப்புரம் பதிப்பு (ஆங்கிலம்/தமிழில்) வெளியிடப்பட்ட மின்னணு ஏலம் மற்றும் விற்பனைக்கான பொது அறிவிப்பு தொடர்பாக, பின்வரும் திருத்த அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

கடன்தாரர்(கள்)	மின் ஏல தேதி
திரு. P. ராஜசேகரன் மற்றும் பிற/ PY/PDR/PDCY/A000000361 திரு. சரவணன் மணி மற்றும் பிற/ PY/PDR/PDCY/A000000011 திரு. S.K. சிவசுப்பிரமணியன் விருஷ்ணமூர்த்தி மற்றும் பிற/ PY/PDR/PDCY/A000000015	19.09.2026க்குப் பதிலாக 19.08.2026 எனப் படிக்கவும்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள திருத்தத்தைத் தவிர, 01.08.2026 அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமணி, விழுப்புரம் பதிப்பு (ஆங்கிலம்/தமிழில்) வெளியிடப்பட்ட மின்னணு ஏலம் மற்றும் விற்பனைக்கான பொது அறிவிப்பில் உள்ள மற்ற அனைத்து விவரங்களும் மாறாமல் அப்படியே தொடரும்.

பெயர் மாற்றம்
I, V GAJALAKSHMI,
பிறந்த தேதி : 22.05.1984,
எண். 27, துலுக்கானத்தம்மன் கோயில் தெரு,
T.V. நகர், முத்தியால்பேட்டை,
புதுச்சேரி–605003,
இது முதற்கொண்டு
V GEJALAKSHMI
என்று அழைக்கப்படுவார்.
V Gajalakshmi

CHANGE OF NAME & D.O.B
I, Smt **K S SARALA**,
W/o. Ex No.2591181W/Nk/R Annadurai (Retd) residing at No. H.No.1/311, Road Street, Melvanniyanur Village, Poondi Post, Kalasapakkam Taluk, Tiruvannamalai District, Tamil Nadu - 606751 declare that I have changed my name from **K S SARALA** to **SARALA A** and Change my Date of Birth from **05.08.1966** to **27.09.1967** in my husband’s Army Service records vide affidavit dated 28.07.2026 before sub divisional magistrate, Tiruvannamalai.
- Smt **K S SARALA**,
W/o. Ex No.2591181W/Nk/R Annadurai (Retd)

தினமணி கதிர்

UJJIVAN SMALL FINANCE BANK
பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழுக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழுக்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண் | கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதி